ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®

ECHOES
இந்தியா
செய்தி மடல்

# அன்பிற்குரிய கமலேஷ்ஜியின் பிறந்த நாள் கொண்டாட்டங்கள்

DJ பார்க், திருப்பூர்
27-29 செப்டம்பர் 2015



கமலேஷ்ஜியின் 60வது பிறந்த நாள் மூன்று நாள் விழாவாக DJ பார்க், திருப்பூரில் கொண்டாடப்பட்டது. அவரது பிறந்த நாள், விழாவாகக் கொண்டாடப்படுவது இதுவே முதல் முறை. இரண்டு மாதத்திற்கு முன்புதான் அறிவித்திருந்த போதிலும், குறைந்த காலத்தில் போதுமான அளவு ஏற்பாடுகளை நிர்வகிப்பவர்கள் செய்திருந்தார்கள். நல்ல முறையில் விழா நடைபெற்றது. குறித்த நேரத்தில் அனைத்து ஏற்பாடுகளையும் செய்ய, ஓய்வில்லாமல் பணியாற்றிய அப்யாசி தன்னார்வத் தொண்டர்கள் அனைவருக்கும் நன்றி.

27, 28 ஆகிய இரண்டு நாட்களும் கமலேஷ்ஜி மூன்று சிட்டிங்குகளையும், 29ம் தேதி நிறைவடையும் சிட்டிங்கையும் அளித்தார். காலையில் 6.30 மற்றும் 10 மணிக்கும், மாலையில் 5 மணிக்கும் சத்சங்கம் நிகழ்த்தப்பட்டது.

27ம் தேதி மாலை, கமலேஷ்ஜி உரையாற்றிய போது, பரிசுகளைப் பெற்றுக்கொள்ள தனக்கு விருப்பமில்லை என்பதைத் தெரிவித்தார். ஏதேனும் கொடுக்க வேண்டும் என்று உணர்ந்தால், மிஷனிற்கு நன்கொடையாக அளிக்கும்படி பணிவுடன் வேண்டிக்கொண்டார். உலகம் முழுவதும் செயல்பட துவங்கியிருக்கும் இதய நிறைவு செயல்பாடுகளை ஏற்பாடு செய்யவும், நிகழ்த்தவும் நிறைய பணம் தேவை என்பதைக் குறிப்பிட்டார்.

28ம் தேதி காலை அவர் மிக்க மகிழ்ச்சி அடைந்து, சிறந்த பிறந்த நாள் பரிசு என்னவெனில், அப்யாசிகள் காட்டேஜை சூழ்ந்து கொண்டில்லாமல் இருந்ததும், முழு இடமும் அமைதியாக இருந்ததும்தான் என்று கூறினார். சகஜ மார்க்கம் ஒலி அலை அதிர்வு போல் ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு எவ்வாறு செல்லவேண்டும் என்றும், புதிதாக மிஷனில் சேர்பவர்கள் மூலம் எவ்வாறு பரவச் செய்ய வேண்டும் என்றும் கூறினார். தளர்வு நிலை பயிற்சியை அவர்கள் சேர்ந்த முதல் நாளிலேயே மற்றவர்களிடம் செய்து பார்க்குமாறு நாம் கூறவேண்டும். அப்போது அவர்களும் மற்றவர்களிடம் இதைப் பற்றி நம்பிக்கையுடன் பகிர்ந்து கொளவார்கள். இதய நிறைவு செயல்பாடுகளைப் பற்றி நன்கு புரிந்துக்கொள்ளும் வரை இந்நிகழ்ச்சிகளை நிகழ்த்த அவசரப்பட வேண்டாம் என்று அப்யாசிகளிடம் கேட்டுக்கொண்டார். அனைத்து அப்யாசிகளிடமிருந்தும் கருத்துக்களைப் பெற விரும்புவதாகவும், அதை suggestions@srcm.org என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பும்படியும் கூறினார்.

திருப்பூரில் முதல் முறையாக, ஆர்வமளிக்கும் வகையில், தியானக் கூடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த, காற்றில் ஈரப்பதம் உண்டாக்கும் வசதிகள், பகலில் இருந்த வெப்பத்தைத் தணிக்கும் விதத்தில், அப்யாசிகளுக்கு மிகத் தேவையாக இருந்தன. தியானக் கூடத்தில், சத்சங்கத்தின் போது சுமார் 16500 பேர் பங்கேற்றனர். உணவு அருந்தும் கூடத்தில் எண்ணிக்கை 19,000ஆக பதிவானது.

இந்நிகழ்ச்சியின் போது பல புத்தகங்களும் ஒலி-ஒளி



ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்® எக்கோஸ் இந்தியா செய்தி மடல்








சாதனங்களும், வெளியிடப்பட்டன. 'Heartfulness' மாத இதழின் சுவாரசியமான அறிமுக பாணி மற்றும் பல தரப்பட்ட விஷயங்களும் பல்வேறு மூலங்களிலிருந்து கட்டுரைகளும் அதில் இடம் பெற்றமையால் அவ்விதழ் பெரும்பாலானோர் கவனத்தைக் கவர்ந்தது.

27 மற்றும் 28ம் தேதிகளில்'இதய நிறைவு' பயிற்சியளிக்கும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதய நிறைவு பற்றிய அனைத்து துவக்க முயற்சிகளும் விவரமாக விளக்கப்பட்டதோடு, சந்தேகங்கள் தெளிவுபடுத்தப்பட்டு, சில சாதனங்கள் ஊக்குதவிக்காக வழங்கப்பட்டன. மாஸ்டர் 28ம் தேதி மாலை அங்கு வந்து இதய நிறைவு நிகழ்ச்சி உதவியாளர்களின் வினாக்களுக்கு விடையளித்தார். மிக எளிய கேள்விகளுக்கும் அவர் பொறுமையாக நகைச்சுவையுடன் பதிலளித்து, அறையில் குழுமியிருந்தோருக்கு மகிழ்ச்சியூட்டி அதே சமயம அவர்களுக்கு அறிவுமூட்டினார்.

'Heartfulness' -- பண்டாராவிற்கு மாஸ்டர் கொடுத்திருந்த கருவிற்கேற்ப, எல்லாவிடங்களிலும் இதய பூர்வமான அணுகுமுறை உணர்வைக் காண முடிந்தது. முதியோர்களுக்கான போக்குவரத்து வசதிகளை கவனித்து சீர்திருத்துவதற்காக முயற்சிகள் எடுக்கப்பட்டன. Comfort dorm ல் 1200பேர் தங்கும் வசதியுடன், தேவைப்பட்டோருக்குக் குளிர்சாதன வசதியுடன் அறைகளும் மற்றும் சூடான நீரும் உணவு வசதியும் இருந்தன.அன்பளிப்பாக விடியற்காலையில் தேனீர், பிஸ்கட், வாழைப்பழம் மற்றும் பழச்சாறும் அங்கே வழங்கப்பட்டன.

மாஸ்டர் தமது ஓய்வில்லாத பணிகளினூடே தினமும் மாலையில் சிறிது தூரம் நடக்கவேண்டி வெளியே வந்து அப்யாசிகளை சந்தித்தார். மாலைகள் லேசான மழையுடன் குளிர்ச்சியாகவும் மகிழ்ச்சி கரமாகவும் இருந்தன. D.J. பார்க்கின் கிழக்கு மூலையில் மயில்கள் மழை வருமுன் நடனமாடிக்கொண்டிருந்தது எல்லோரையும் கவர்ந்தது.

இந்த பண்டாராவின் போது தொடங்கப்பட்ட சகஜ் கனெக்ட் என்னும் கைத் தொலைபேசி பயன்பாடு எல்லோருடைய கவனத்தையும் ஈர்த்தது. இப்பயன்பாட்டின் மூலம் அப்யாசிகள் எந்த சமயத்திலும், அவர்கள் எங்கிருந்தாலும் ப்ரிசெப்டர்களிடம் சிட்டிங் எடுத்துக்கொள்ள முடியும். நீர் வினியோகம், சுத்தப்படுத்தப்பட்ட குடிநீர், கழிவு நீர் நிர்வாகம் ஆகியவை போதிய அளவு சீராக நடந்து கொண்டிருந்தன. மாஸ்டர், எதிர்காலத்தில் செய்ய வேண்டியிருக்கும் சில முன்னேற்றங்களைப் பற்றி அறிவுறுத்தினார்.

29ம் தேதி காலையில் தமது முடிவுரையில் மாஸ்டர் எல்லோரையும் தமது ஆன்மீக நிலைகளை தக்க வைத்துக்கொண்டபடி, அடுத்த பண்டாராவான லாலாஜி மகாராஜரின் பிறந்த நாள் ஆண்டு விழாவை எதிர்பார்த்திருக்குமாறு கூறினார். பண்டாராவில் பங்கேற்ற பெரும்பாலானோர் தமது அனுபவங்கள் உணர்ச்சி மிக்கதாய் இருந்ததாக விவரித்தனர்.



## இந்தியாவின் ஏனைய இடங்களில் நடைபெற்ற விழாவின் புகைப்படத் தொகுப்பு











## புதிய பதிப்பக வெளியீடுகள்







### புத்தகங்கள்

ராம் சந்த்ராவின் படைப்புகளின் முழு தொகுப்பு - பாகம் 3 (தமிழ்)
கம்ப்ளீட் வொர்க்ஸ் ஆ~ஃப் ராம் சந்த்ரா - வால்யூம் 4 (மலையாளம்)
வே ஆ~ஃப் லவ் (ஆங்கிலம்)

### ஆங்கில DVDக்கள்

லவ் இஸ் தி எஸென்ஸ்
தி எஸென்ஸ் ஆ'ஃப் சகஜ் மார்க்





ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா செய்தி மடல்





அகமதாபாத்

## மாஸ்டரின் பயணச் செய்திகள்

### ஆகஸ்ட் 2015

### அகமதாபாத், குஜராத்

கம்லேஷ்ஜி ஹைதராபாத்திலிருந்து ஆகஸ்ட் 13ம் தேதி அகமதாபாத் வந்து சேர்ந்தார். பூஜ்ய லாலாஜி மகராஜ் மகாசமாதி தினமான ஆகஸ்ட் 14ம் தேதி, அடலாஜ் யோகாசிரமத்திற்கு, அம்மண்டலத்தில் உள்ள அனைத்து அப்யாசிகளும் சத்சங்கத்தில் கலந்து கொள்ள வரும்படி அழைக்கப்பட்டனர். ஆசிரமத்தில் 1100 அப்யாசிகள் குழுமியிருந்தது ஒரு சிறிய பண்டாரா போன்று இருந்தது. கம்லேஷ்ஜி மூன்று நாட்களிலும் தினசரி இரண்டு சத்சங்கங்கள் நடத்தினார்.

ஆகஸ்ட் 15ம் நாள் சத்சங்கத்திற்குப் பின்னர் கம்லேஷ்ஜி அனைத்து அப்யாசிகளுக்கும் உரை நிகழ்த்தினார். செயலர்கள் பணி குறித்துத் தெளிவுப்படுத்தினார். எப்படி ஒருவர் தன் பயிற்சியின் மூலமாக, குறிப்பாக மிஷனின் பணியினை தன் சொந்தப் பணியாக எடுத்து செய்வதன் மூலம் தம்முள் ஒளியினை உண்டாக்கும்படி தன் குருவினை கட்டாயப் படுத்த முடியும் என்பது குறித்தும் அவர் விளக்கிக் கூறினார். பாபுஜி மகராஜின் கருத்துக்கள், 10.12.2004 தேதியிட்ட விஸ்பர்ஸ் செய்தி ஆகியவற்றிலிருந்து உதாரணங்களை எடுத்து மிக விளக்கமாகப் பேசினார். பெரும்பாலும் அவை இதயநிறைவைப் பற்றியதாக இருந்தது.

மாலையில் நடைபெற்ற கேள்வி பதில் நிகழ்ச்சியில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களில் சில:

* நமக்கு கொடுக்கப்பட்டது எதுவானாலும் அது மற்றவர்களிடம் பரப்புவதற்காகத்தான் உள்ளது. ஒருவரை சந்திக்கும்போதும், அவர்களுடன் கைக்குலுக்கும் போதும் நம்முள் உள்ள ஆன்மீக நிலையின் பிரதிபலிப்பை அந்த நபர் கட்டாயம் உணர வேண்டும். அது நம்மில் இருந்து வெளியே கட்டாயம் கசிந்து சென்றாகவேண்டும். நாம் ஒரு ஆன்மீக நிலைகளின் கல்லறையாக இருக்கக்கூடாது. தொற்று நோய்போல் வெகுவேகமாக பரவுவதற்காக அவை உள்ளன.

* நம் உயரிய மாஸ்டர்களால் நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட நம் குழந்தைகளுக்கு நாம் ஒரு அறங்காவலர்களாக இருக்கவேண்டும், அவர்களுக்கு உதவுகின்றோம் என்று போலியான எண்ணம் கொண்டு அவர்களின் வாழ்கை இவ்வாறு தான் இருக்க வேண்டும் என நாம் அவர்களைக் கட்டாயப் படுத்தக்கூடாது என்று தாய்மார்களுக்கு அறிவுரை வழங்கினார். ஒரு பெண்ணுக்குரிய மிக முக்கியமான முதன்மையான பணி தன் குழந்தைகளைக் காத்துப் பேணுவதுதான் மற்றவை அனைத்தும் இரண்டாம்பட்சம் தான் என்றார் அவர்.

இது வந்திருந்த அனைவருக்கும் மகிழ்ச்சியான கற்றுக்கொள்ளும் நிகழ்ச்சியாக இருந்தது.

### பிரிசெப்டர்கள் பயிற்சி நிகழ்ச்சி

முதலில் 18 பேர்களுக்கு ஆகஸ்ட் 19ம் தேதி முதல் 23ம் தேதி வரை பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நாடு முழுவதிலிருந்தும் வந்தவர்களின் எண்ணிக்கை மெல்ல மெல்ல உயர்ந்து இறுதியில் 52ஆனது. பயிற்சிக்கு ஒரு நாள் முன்னதாக மாலை சத்சங்கத்திற்குப் பின்னர் மாஸ்டருடன் ஒரு சுருக்கமான சந்திப்பு நடந்தது. அனைவரும் பரிந்துரை செய்யப்பட்ட புத்தகங்களை அவற்றின் சாரத்தினை அவர்களுக்குள் உணரும் வரை படிக்க வேண்டும் என அவர் அறிவுரை வழங்கினார்.

யோகாசிரமத்தில் உள்ள பயிற்சிக் கூடத்தில் கம்லேஷ்ஜி ஆழ்ந்த அறிவார்ந்த உரையினை நிகழ்த்தினார். அதில் அவர், விவேகானந்தர் உரையிலிருந்து ஒரு பகுதியினை வாசித்தார். விவேகானந்தரின் குடும்பத்திற்கு அவரின் தேவை இருந்தபோதும், அவருடைய குருவின் பணிக்கு எவ்வாறு முன்னுரிமை கொடுத்தார் என விவரித்துள்ளார். இது காலத்தின் அவசியம் மற்றும் நாம் எதற்கு முன்னுரிமை அளிக்கவேண்டும் என்பதற்கான அன்புமிக்க, அக்கறையுள்ள, எளிமையான உரையாக இருந்தது.

22ம் தேதி காலை கம்லேஷ்ஜி இறுதி சத்சங்கத்தினை நடத்திவிட்டு 10.30 மணி அளவில் மும்பை சென்றார்.



பிரிசெப்டர் பயிற்சி, அகமதாபாத்

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்® எக்கோஸ் இந்தியா செய்தி மடல்


அகமதாபாத்


பன்வேல்

## பன்வேல், மும்பை

பெலரூஸ் பயணத்திற்கு முன், மாஸ்டர் பன்வேல் ஆசிரமத்திற்கு விஜயம் செய்தார். ஆயிரக்கணக்கான அப்யாசிகள் அமைதியாக அங்கு குழுமி, அந்த இரண்டு நாட்களிலும் அவரின் அருகாமையில் ஆன்மீக பயனடைந்தனர்.

பொது உணவுக்கூடத்தில் அவர் அப்யாசிகளுடன் மாலை நேர உணவருந்தினார். அப்யாசிகளுடன் அளவளாவி, அவர்கள் எழுப்பிய வினாக்களுக்கு பதிலளித்தார்.

ஞாயிறு 23ம் தேதி காலை சத்சங்கத்திற்குப்பின் அவர் உரையாற்றும் பொழுது, தியானத்திற்கு பின்னும் அந்த நிலையை நாள் முழுவதும் தக்க வைத்துக்கொள்ள அறிவுறுத்தினார். பாபூஜி, 1945ம் வருடம் ஆரம்பித்து வைத்த இந்த சகஜ மார்க்க இயக்கத்தைப் பற்றி அங்கு இருந்தவர்களுக்கு நினைவூட்டி, நாம் மென்மேலும் வளர்ச்சியுற்று உலகம் முழுவதும் பரவ வேண்டுமெனக் கூறினார். எண்ணிக்கை ஒரு பொருட்டல்ல; நாம் மற்றவர் இதயத்தின் மீது ஏற்படுத்தும் தாக்கமே முக்கியமானதாகும்.

சுவாமி விவேகானந்தரின் இலக்கியங்களைப்பற்றி கூறும் பொழுது, அவர் தம் குருவின் உபதேசங்களை பரப்ப மிகவும் கடினமாக உழைக்கவேண்டியிருந்தது, ஆனால் நாம் சீடர்களாக, இந்த இயக்கத்தைப் பரப்ப அந்த மாதிரி இன்னல்களையெல்லாம் அனுபவிக்க வேண்டிய அவசியமில்லை என்பதை நினைவுறுத்தினர்.

மாஸ்டர், பல அப்யாசி குழுக்களுடன் உரையாடினார். பன்வேலின் தன்னார்வத்தொண்டர்களுடன் உரையாடும் பொழுது, மும்பையை சுற்றியுள்ள சிறு மையங்களுக்கும், இளைஞர், மற்றும் மூத்த குடிமக்கள் குழுவிற்கும் உறுதுணையாக இருக்குமாறு கேட்டுக்கொண்டார்.

மாலை சத்சங்கத்திற்குபின் குழந்தைகளைப்பற்றி பேசும் பொழுது, பெற்றோர்கள், குழந்தைகளின் சூட்சும உடலைப் பாதிக்காவண்ணம் நடந்து கொள்ளவேண்டுமென வலியுறுத்தினார். குழந்தைகளின் லயத்துடன் ஒத்திசையும் வண்ணம், பெற்றோர்கள் தங்கள் வாழ்க்கை முறையைச் சீராக்கிக் கொள்ளுமாறு உபதேசித்தார்.

தம் உரையாடலின் போது, குண உருவாக்கம் மற்றும் ஒழுக்கம் பற்றி வலியுறுத்தி, இந்நன்னெறிகள் அவர்களின் வெளி நடத்தையிலும் பிரதிபலிக்க வேண்டும் என்று கூறினார். தியானம் என்பது வாழ்க்கையில் மற்றுமொரு தினசரி சடங்காக மாறிவிடக்கூடாது என எச்சரித்தார்.

இந்நீண்ட ஞாயிறுக்குப்பின் அவர், மும்பையிலிருந்து ஃப்ராங்ஃப்ர்ட் வழியாக மின்ஸ்க் செல்ல பயணம் மேற்கொண்டார்.

## பெலரூஸ் மற்றும் ஃபிரான்ஸ் பயணம்

மாஸ்டர், ஆகஸ்ட் 24 - 30 ம் தேதி வரை பெலரூஸிலுள்ள மின்ஸ்க் நகரில் தங்கினார். அதன் பின் அவர் தன் பயணத்தை தொடர்ந்து ஃபிரான்ஸ் நாட்டிலுள்ள நைஸ் மற்றும் மோன்ட்பெலியருக்குச் சென்றார். ஆகஸ்ட்31 ம் தேதியிலிருந்து செப்டெம்பர் 4 ம் தேதி வரை அவர் ஃபிரான்ஸில் தங்கினார். அவரின் இந்த பயணம் பற்றிய விரிவுரையை மிஷனின் வலைப்பதிவில் காணலாம்.

அவரின் உரையிலிருந்து சில துளிகள்:

- "ஒழுங்கு முறையாக தியானம் செய்யுங்கள். இதன் மூலமாக சிறப்பான ஒருமித்த ஆன்மீகச்சூழலை உருவாக்க எனக்கு உதவி செய்வீர்கள்" என பாபூஜி கூறியதை சுட்டிக்காட்டினார். இந்த ஒருமித்த சூழலின் மக்களின் நிறை அல்லது


பெலரூஸ்

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்® எக்கோஸ் இந்தியா செய்தி மடல்



பெலரூஸ்



இந்தோர்

அவசியமான நிலையை அடையும் அந்த தருணம் தான் மரபணு மாற்றத்திற்கான ஆரம்பம் ஆகும்.

- மாஸ்டரின் உபதேசங்களை முதலில் நம் இதயத்தில் கிரகித்துக்கொண்டு, அதன் பின் உலகத்தில் பரப்புவதே, சிறப்பான ஒரே வழியாகும்.
- ஏற்றுக்கொள்ளுதல் ஆன்மீகத்திற்கான முதல் படியாகும். இந்த ஏற்றுக்கொள்ளுதலை கற்றுக்கொடுக்கும் பயிற்சியிடம் குடும்ப வாழ்க்கை ஆகும்.
- ஆன்மீகத்திற்கு தேவையான மிக முக்கியமான குணம், பணிவு என்பதை அவர் பகிர்ந்து கொண்டார். இது இருந்தால் மிக எளிதாக உயர்ந்ததை அடையலாம். பணிவு என்பது தன்னை முக்கியமில்லாததாக உணர்வது என்று கூறினார்.

## செப்டம்பர் 2015

### பன்வேல் ஆசிரமம், மும்பை

செப்டம்பர் 11 காலை 9:30க்கு கம்லேஷ்ஜி பன்வேல் ஆசிரமம் வந்தார். காலை உணவிற்குப்பின், ராய்கரில் உள்ள பிள்ளை கல்லூரி, ரசயனி வளாகத்திற்குச் சென்றார். மாலை, பன்வேல் ஆசிரமத்தில் சத்சங்கம் நடத்தினார். சத்சங்கத்திற்குப் பின், அப்யாசிகளை அவர்களுடைய பயங்களை காகிதத்தில் எழுதி அவரிடம் கொடுக்கச் சொன்னார்.

12ஆம் தேதி காலை 7:30க்கு சத்சங்கம் நடத்தினார். பிறகு அவர் உரையாற்றிய போது, அனைவரும் தன்னைப் படைத்தவன் மீது அதீத நம்பிக்கை கொள்ளவேண்டும் என்று கூறினார். காலை 11:30க்கு பன்வேல் ஆசிரமத்திலிருந்து இந்தோர் செல்வதற்காக விமான நிலையம் புறப்பட்டு சென்றார்.

### இந்தோர், மத்தியப் பிரதேசம்

இந்தோர் விமான நிலையத்தில் அப்யாசிகள் கம்லேஷ்ஜியை மனதார வரவேற்றனர். துரிதமான மதிய உணவும், குறுகிய ஓய்வும் முடிந்து, பழைய ஆசிரமத்திற்கு சென்றார். அங்கு 1000த்திற்கும் அதிகமான அப்யாசிகளுக்கு சத்சங்கம் நடத்தினார். ஆசிரமத்திற்கு செல்லும் வழியில், வழிகாட்டுதலுடன் கூடிய சுத்திகரிப்பின் செய்முறை விளக்கத்தை விரிவாகக் கூறினார். இதே செய்முறை விளக்கத்தை, சத்சங்கத்திற்கு முன் இந்தியில் சொல்லும்படி ஒரு சகோதரரை கேட்டுக்கொண்டார். 5-7 நிமிட வழிகாட்டுதலுடன் கூடிய சுத்திகரிப்புக்குப் பின் கம்லேஷ்ஜி 40 நிமிடங்கள் சத்சங்கம் நடத்தினார். சத்சங்கத்திற்குப் பின் அவர் பேசியபோது, இதய நிறைவை அறிமுகப்படுத்தினார். சகஜ மார்க்கத்தை பரப்புவதற்கு நிறைய பிரிசெப்டர்கள் தேவை; ராம்சந்த்ராவின் படைப்புகளின் முழு தொகுப்பின் அனைத்து பகுதிகளும் படித்து, மிஷனுக்கு சேவை செய்ய தயாராக இருந்தால், பிரிசெப்டராக சேவை செய்ய விருப்பம் தெரிவிக்கலாம் என்று கூறினார்.

13ஆம் தேதி காலை 7:30க்கு கம்லேஷ்ஜி பர்தரியில், புதிய ஆசிரம இடத்தில் சத்சங்கம் நடத்தினார். பிறகு அவர் தியான மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டினார். சில சிறுவர்களை அழைத்துத் திறக்கச் சொல்லி, அவர் பார்வையிட்டார்.

முன்தினம் பலத்த மழை பெய்ததால், அருகிலிருந்த ஒரு கல்லூரியில் தங்குவதற்கும் மற்ற வசதிகளும் ஏற்பாடு செய்திருந்தனர். கல்லூரியின் திடலை தற்காலிக தியான மண்டபமாக பயன்படுத்தினர்.

காலை 10:30க்கு ப்ரிசெப்டர்கள் கூட்டம் நடத்த கம்லேஷ்ஜி முடிவெடுத்ததும், உடனடியாக கல்லூரி அரங்கத்தை தயார் செய்தனர். சுமார் 60 ப்ரிசெப்டர்கள் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தின் முக்கிய நோக்கம், ப்ரிசெப்டர்கள், முக்கியமாக புது அப்யாசிகளிடம், திறந்த மனதோடும், நட்போடும் இருக்கவேண்டும் என்பதைக் கூறுவதற்கேயாகும். புதன் மற்றும் ஞாயிறு சத்சங்கம் பல இடங்களில் நடப்பதின் அனுபவத்தையும், அதனால் வருபவர்களின் எண்ணிக்கை எப்படி உயர்ந்தது என்பதையும் அவர் பகிர்ந்துகொண்டார்.

அங்கிருந்தோர் அனைவரையும் அவர், முறையே அவரவர்



இந்தோர்

மையங்களில் இதனை பரிசோதித்துப் பார்க்கும்படி ஆர்வமூட்டினார்.

- ஒரு பிரிசெப்டர் தாழ்வான சிந்தனையால் தன்னுடைய செயற்திறமையை மட்டுப்படுத்தக் கூடாது என்று அவர் விளக்கினார். ஒரு பிரிசெப்டரானவர், ஓர் அப்யாசி, ஒரு நகரம், ஒரு மாநிலம், ஒரு தேசம், ஒரு கண்டம் அல்லது இந்த முழு பூமி, இவற்றில் எதன் மீது வேண்டுமானாலும் பணியாற்றலாம் என்றும் அவர் கூறினார்.
- மேலும் அவர், 13-நாள் ஈமச் சடங்குகளை, சகஜ மார்க்கத்தில் மாஸ்டரின் அனுமதியுடன் முக்தியடைவதற்காக கடக்கப்பட வேண்டிய 13 புள்ளிகளுடன் தொடர்பு படுத்திப் பேசினார். ஆகையினால், நமக்கு நெருக்கமானவர்கள் அல்லது யாரேனும் அப்யாசியின் மரணம் பற்றிய செய்தி, அவர்களின் நன்மைக்காக மாஸ்டர் பணிபுரியும் பொருட்டு, உடனடியாக மாஸ்டருக்கு மின்னஞ்சல் (ஈ-மெயில்) மூலம் தெரிவிக்கப்பட வேண்டும். ஒரு பிரிசெப்டர் அங்கே எப்போது போகிறாரோ அப்போது ஒரு சத்சங்கம் நடத்தலாம்; அப்போது, அப்யாசியல்லாதவர் உட்பட, யாரெல்லாம் அங்கே இருக்கிறாரோ அவரெல்லாம் அதில் பங்கேற்கலாம்.
- அவர் எவ்வாறு இந்தூர் மையத்தை தனது (திடீர்) வருகையினால் ஆச்சரியத்தில் ஆழ்த்தினாரோ, அதே போன்று சில சமயங்களில் பிரிசெப்டர்களும் அப்யாசிகளை வியக்க வைக்க வேண்டும்; (அப்யாசியை) தொலைபேசியில் அழைத்து சிட்டிங் கொடுக்க முன்வர வேண்டும் என்றார்.

அன்று காலை 11 மணி சத்சங்கத்தின் போது நன்றாக வெயில் இருந்ததால், யாரும் வெயிலில் அமரக்கூடாது என்றும், தாழ்வாரத்தையோ அல்லது கல்லூரி அறைகளையோ கூட பயன்படுத்திக் கொள்ளுமாறும் அவர் குறிப்பாக அறிவுறுத்தினார். இச்செய்கையானது, நம் அன்பிற்குரிய மாஸ்டரின் அக்கறை மிகுந்த இயல்பை வெளிக்கொணர்ந்தது.

மாலை 3.30 மணியளவில் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்தது; இதில் அனைத்துக் கூடாரங்களும் தற்காலிக தியான மண்டபமும் நிலைகுலைந்தன. வானிலையைக் கருதி, அத்தகைய கடுமையான நிலைகளுக்கான ஏற்பாடுகள் செய்ய இயலாதாகையால், அனைத்து வெளியூர் அப்யாசிகளும் அவ்விடத்தை விட்டு அகலுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். மாலை சத்சங்கம் ரத்து செய்யப்பட்டது; இரவு 10 மணிக்கு முன்பாக, அனைவரும் எங்கெங்கு இருந்தனரோ அவ்விடத்திலேயே அமர்ந்து தியானம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். தற்செயலாக, கல்லூரியின் உரிமையாளர்கள் (இரு பங்குதாரர்கள்) கம்லேஷ்ஜியை சந்திக்க வந்தனர்; அவர்கள் ஆர்வம் காட்டியதால், மாஸ்டர் அவர்களுக்கு சிட்டிங் அனுபவத்தைக் கொடுக்க முன்வந்தார். அவர் மாலை 5.30 மணியளவில், தளர்ச்சியடைதலில் தொடங்கி தியானத்திற்கு இட்டுச் சென்றார். தியானத்தின் போது, சகோதரர்களுள் ஒருவர் இருமிக் கொண்டிருந்தார்; கம்லேஷ்ஜி தாமே எழுந்து சென்று, காற்றாடியை அணைத்துவிட்டு அவரிடம் ஒரு தண்ணீர் பாட்டிலைக் கொடுத்துவிட்டு தியானத்தைத் தொடர்ந்தார்.

14-ம் தேதியன்று அவர், பழைய ஆசிரமத்தில் காலை 7.30 மணிக்கு சுமார் 800 அப்யாசிகளுக்கு சத்சங்கம் நடத்தினார். ஆசிரமத்தில் காலைச் சிற்றுண்டி



பிரிபெக்ட் பயிற்சி, திருப்பூர்

உட்கொண்ட பிறகு, அவர் திடீரென, புதிய ஆசிரமத்திற்கான மனையைப் பார்வையிட முடிவு செய்தார். பயணத்தின் போது, யு-கனெக்ட் நிகழ்ச்சி நடத்தப்படும் நிறுவனம் அமைந்துள்ள பல்கலைக்கழக வளாகத்திற்குள் சுற்றி வந்தார்.

விமான நிலையத்திற்கு புறப்படும் முன், அவர் பழைய ஆசிரமத்திற்குச் சென்று, தன்னார்வப் பணியை தன்னை மறந்த நிலையில் செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தி தன்னார்வப் பணியாளர்களுக்கு உரை நிகழ்த்தினார். (தான் ஆற்றிய) பணியைப் பற்றி யாரிடமேனும் (மாஸ்டரிடம் கூட) வெளிப்படுத்த வேண்டுமென்ற எண்ணமே கூட அதன் அடிப்படை நோக்கத்தை அழித்துவிடுகிறது. யாரென்று அறியப்படாதவாறு, உளமார மரியாதையுடன் பணியாற்றப்பட வேண்டும் என்றார். அவர் அனைவரிடமும், சேவையாற்றும் உணர்வே இல்லாதவாறு சேவையாற்றி, ஆற்றிய பணிக்கான அங்கீகாரம் தேவையற்ற அளவுக்கு வளரும்படி கேட்டுக்கொண்டார்; இல்லையெனில், அது கர்வத்தையும் அகங்காரத்தையும் அதிகரித்துவிடும் என்றார்.

அவர் தமது அடுத்தகட்ட ஹைதராபாத் பயணத்திற்காக, இந்தூர் விமான நிலையத்தை காலை 11 மணிக்குச் சென்றடைந்தார்.

## திருப்பூர்

கம்லேஷ்ஜி செப்டம்பர் 20-ம் தேதி, திருப்பூர் வந்தடைந்தார். அவருடைய வருகை உற்சாகமிக்க நெஞ்சங்களால் வெகு அமைதியான முறையில் ஏற்கப்பட்டது. செப்டம்பர் 19-ம் தேதி முதல் செட்டிபாளையம் ஆசிரமத்தில் 138 பங்கேற்பாளர்களுக்கான ஒரு புதிய பிரிசெப்டர் தேர்வாளர் பயிற்சி நடந்துகொண்டிருந்தது. அவர்களுக்கு அவர் ஒரு சிட்டிங் கொடுத்துவிட்டு உரையாற்றினார்.



திருப்பூர்

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்® எக்கோஸ் இந்தியா செய்தி மடல்


ஈரோடு ஆசிரமத் துவக்க விழா


இலவச மருத்துவ மையம், திருப்பூர்

பண்டாராவிற்கு முன்னர், தமிழ்நாடு மற்றும் கேரளாவைச் சேர்ந்த பிரிசெப்டர்களுக்கான ஒரு 3-நாள் கருத்தரங்கம் 24-ம் தேதி காலை, சத்சங்கம் மற்றும் கம்லேஷ்ஜியின் உரையுடன் துவங்கியது. மிகத் தெளிவாக, சமீப கால கருத்தரங்க முறைமையானது, தன்னுள் ஆழ்ந்து சென்று அவர் கொடுப்பதை உணர்ந்து அதை போற்றிப் பேணுவதேயாகும்.



திருப்பூரில் இருந்தபொழுது, மாஸ்டர் ஓய்வே இல்லாமல், அதிகாலை முதல், நடு இரவு வரை செயலாற்றிக் கொண்டிருந்தார். செப்டம்பர் 25-ந் தேதி, ஈரோடு ஆசிரமத்தில் புதிதாக கட்டப்பட்ட தியான கூடத்தை திறந்து வைத்தார். காலை 10.15 மணிக்கு மாஸ்டர் ஈரோடு ஆசிரமத்திற்கு வருகை புரிந்தார். முதலில் அவர், தியான கூடம் செல்லும் பாதையில் வலது பக்கம், அரசமரக்கன்று ஒன்றைநட்டார். தியான கூடத்திற்குள் நுழைகையில் 'இது ஒரு அருமையான தியானக்கூடம்' என்று கூறினார். அவர் சத்சங்கம் வழங்கி, ஊக்கமளிக்கும் வகையில் உரையாற்றினார். அது மையப் பொறுப்பாளரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. அவருடைய உரையில், பிராணாஹூதி என்பது காற்று போல் அனைத்து இடங்களிலும் இருக்கிறது, மாஸ்டரின் உதவியால் நாம் அதை உணருகிறோம் என்று குறிப்பிட்டார். மேலும், ஈரோடு மையத்திற்கு இன்னும் பிரிபெக்ட்கள் தேவை என்றும், அப்யாசிகள் தாங்களாகவே அந்த பணிக்கு தயாராக வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இந்த ஆசிரமம் ஈரோடு பேருந்து நிலையத்திலிருந்து 12 கிலோ மீட்டர் தொலைவில், ஆட்டையாம்பாளையத்தில், பெங்களூர் - சென்னை தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. புதிய தியானக்கூடம், பக்கங்களில் உள்ள நடை மற்றும் முன்பகுதியை சேர்த்து 10400 சதுர அடியில் கட்டப்பட்டுள்ளது. தொழில் முறை நுணுக்கமான வேலைகளைத் தவிர, அனைத்து வேலைகளும் அப்யாசிகளால் செய்யப்பட்டன. இவ்வேலைகளின் பொழுது ஆசிரம வளாகத்தில் உகந்த ஒரு சூழ்நிலை நிலவியது. குழுவாக இணைந்து செயல்படுதல் சகோதரத்துவத்தை வளர்த்தது.

திருப்பூர் வைரவிழா பூங்காவில், கமலேஷ்ஜி, இலவச மருத்துவ சேவை மையத்தை, 26-ந் தேதி காலை சத்சங்கத்திற்கு முன்பாக திறந்து வைத்தார். இம்மருத்துவ மையம் பொது மக்களுக்கு திறந்து வைக்கப்படும்.

திருப்பூர் போலீஸ் கமிஷனர், கமலேஷ்ஜி அவர்களை சந்தித்து, இதயநிறைவு நிகழ்ச்சியை நடத்திக் கொடுக்குமாறு அழைப்பு விடுத்தார். கமலேஷ்ஜி 30-ந் தேதி விழா முடிந்தபிறகு, கமிஷனர் அலுவலகம் சென்று, 650 காவல் துறை அதிகாரிகளுக்கு இதயநிறைவு நிகழ்ச்சியை வழங்கினார். இதய நிறைவு பயிற்சி, அடுத்த இரண்டு நாட்களுக்கு தொடர்ச்சியாக அளிக்கப்பட்டது.

### ஹைதராபாத்

மாஸ்டர் பண்டாராவிற்கு பிறகு கன்ஹாவில் சில நாட்களை செலவிட்டார். அங்கு தங்கியிருந்தபொழுது, தன்னுடைய நேரத்தை ஓய்வெடுத்துக் கொள்ளவும், இமயமலை பயணத்திற்கு தயார்படுத்திக்கொள்ளவும் செலவிட்டார். சகஜ் கனெக்ட் பயன்பாட்டினை மூலம் நிறைய சிட்டிங் வழங்கினார். இந்த நாட்களில் 'சகஜ மார்க்க தத்துவம்' புத்தகத்தை வாசித்தார். அவரின் சகஜமான உரையாடலில் இருந்து சில முத்துக்கள்:


கன்ஹா

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்® எக்கோஸ் இந்தியா செய்தி மடல்

heartfulness
purity weaves destiny



* குருவின் மீதான அன்பைப் பற்றிப் பேசுகையில், குருவிற்கு அவமானத்தைத் தரும் எதையும் நாம் செய்யக் கூடாது என்று கூறினார். வாழ்க்கையில் நம் நடத்தையும், நாம் பேசும் வார்த்தைகளும், குருவின் உபதேசங்களின் சாரத்தைப் பிரதிபலிப்பதாக இருக்கவேண்டும்.

* பாபூஜி மகராஜைப் பற்றிப் பேசுகையில்,' நம் வாழ்வில் தெய்வீக சாராம்சத்தைக் கொண்டு வருவதே இதய நிறைவு ஆகும்' என்று கூறினார்.

* உங்களால் ஆசையைத் துறக்க முடியாது. ஆசையின் தன்மை மற்றும் அதன் பயனின்மையை மட்டுமே உங்களால் அறிந்து கொள்ள முடியும். அதை நிறைவேற்றவோ, துறக்கவோ செயல்படுவதால் எவ்விதப் பயனும் இல்லை. ஆசையின் தன்மையைப் புரிந்து கொண்டிருக்கும் ஒருவர், வாழ்க்கைக் கலையைக் கற்றிருக்கிறார்.

அக்டோபர் 8ம் தேதி, காலை 10.30 மணிக்கு டில்லியை அடைந்த கம்லேஷ்ஜி, உடனேயே சாலை மார்க்கமாக சத்கோலுக்குப் புறப்பட்டார்.

## இதய நிறைவு - ராய்காட், மகாராஷ்டிரா

செப்டம்பர் 12 ம் தேதி, ரசயனியில் உள்ள பிள்ளை HOCL கல்வி வளாகத்தின் புதிய நிர்வாகக் கட்டிடத்தை கம்லேஷ்ஜி திறந்து வைத்ததுடன், தியானத்தின் மீதான தேசிய நிகழ்வு துவங்கியது. மகாத்மா கல்வி நிறுவனத்தின் தலைவரும், தலைமை நிர்வாக அதிகாரியுமான டாக்டர் K.M. வாசுதேவன் பிள்ளை, அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், பயனுள்ள, வெற்றிகரமான வாழ்க்கையைப் பெற, தங்களது இளமைப் பருவத்தை, நல்லறிவுடனும், சாமர்த்தியமாகவும் பயன்படுத்த வேண்டும் என, தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

கம்லேஷ்ஜி தனது உரையில், தியானத்தின் பயன்களான நுண்ணறிவுத் திறன் (IQ level) அதிகரித்தல், மன அழுத்தம் குறைதல், கல்வியில் சாதனை புரிவது மேம்படுதல் மற்றும் நல்ல கவனம் ஆகியவை பற்றி வலியுறுத்தினார். இதைத் தொடர்ந்து, தளர்வு நிலைப் பயிற்சியும், தியானமும் இருந்தன.

சுமார் 1200, மூன்றாம் மற்றும் இறுதி வருட மாணவர்கள், இதில் பங்கேற்றனர். மாணவர்களின் பின் கருத்துக்களைப் பெற்றதும், நன்றி கூறலுடன் நிகழ்ச்சி நிறைவுற்றது.

இந்நிகழ்வைத் தொடர்ந்து, மாணவர்களுக்கான இதய நிறைவு தளர்வு நிலை நுடபம் மற்றும் தியானம் பற்றிய ஒரு மூன்று நாள் பயிற்சி முகாம் நடைபெற்றது. மொத்தம் 120 மாணவர்கள் பயிற்சியை நிறைவு செய்து, HOCL வளாகத்தில் நடக்கும் வாராந்திர குழுத் தியானத்திற்கு பதிவு செய்து கொண்டுள்ளனர்.

இந்நிகழ்ச்சியின்போது, 'இதய நிறைவு மாணவர் நல்வாழ்வு சங்கம்' ஒன்று துவக்கப்பட்டு, 15பேர் கொண்ட ஆசிரியர் மற்றும் மாணவர் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இத்துவக்க முயற்சி, மகாத்மா கல்வி நிறுவனத்தின் நல்வாழ்வுத் துறையின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தியானம், ஆன்மீகம், ஆரோக்கியமான உடற்கட்டு, பொழுதுபோக்கு ஆகியவை சார்ந்த செயல்பாடுகள், ஆசிரியர், மாணவர்களுக்கு முறையாக நடத்தப்படும் என்றும், இவை மாணவர் செயல்பாட்டு கால அட்டவணையில் ஒரு அங்கமாக்கப்படும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.




ராய்காட்



## தமிழக ஆளுநரின் மணப்பாக்க ஆசிரம வருகை

தமிழக ஆளுநர், மேதகு டாக்டர் K. ரோசய்யா அவர்கள், தியான அனுபவத்தைப் பெற, அக்டோபர் 11 ம் தேதி ஞாயிறு அன்று, மணப்பாக்கம் ஆசிரமத்திற்கு வருகை புரிந்தார். அமைதியான ஆசிரமத்தின் சூழலில், அப்யாசிகளின் இதயபூர்வ வரவேற்பை ஏற்று, அமர்வு நடக்கும் அரங்கிற்குச் சென்றார்.

தியானம் என்பது என்ன? அதன் பயன்கள் என்ன? மற்றும் இதயத்தின் மீது தியானம் செய்வது எப்படி? என்பவை பற்றிய சிறிய முன்னுரைக்குப்பின், முதல் சிட்டிங் வழங்கப்பட்டது. அமர்வின் முடிவில் அவர், " இது மிகவும் அருமையான ஒரு அனுபவம். நான் இதுவரை என் வாழ்வில் பெறாத புதிதான ஒன்றாகும். முன்பு உணர்ந்திராத ஒரு ஆனந்தத்தை அடைந்தேன்" என்று கூறினார். அடுத்த அமர்வுகளை நடத்த ராஜ்பவனுக்கு வருவதாக பிரிசெப்டர்கள் கூறிய போது, " தியானம் செய்யவேண்டும் என்று உணரும்போதெல்லாம் நான் ஆசிரமத்திற்கு வருவதுதான் முறையாகும் " என்று புன்னகையுடன் கூறிய அவருக்கு, புத்தகங்களின் முழுத் தொகுப்பும் வழங்கப்பட்டது.

உடன் வந்திருந்தவர்களில் 15 பேர் அறிமுக சிட்டிங்குகள் எடுத்துக் கொண்டு, தங்களது ஆன்மீகப் பயிற்சியைத் தொடங்கி உள்ளனர்.

## மணப்பாக்கம் ஆசிரமத்தில் இளைஞர் செயல்பாடுகள்

கடந்த ஒரு மாதமாக, சென்னை இளைஞர்கள், மையச் செயல்பாடுகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள, பெருமளவில் ஒன்று கூடி வருகின்றனர். இளம் அப்யாசிகளுக்கு, குறிக்கோளைப் பற்றிய உணர்வைக் கொடுப்பதையும், அவர்களால் எவ்வாறான பணிகளில் பங்கேற்க முடியும் என்பது பற்றிய விவரங்களைக் கொடுப்பதையும் தீவிரமாக கவனத்தில் கொண்டு, மணப்பாக்கத்தில், பல சந்தர்ப்பங்களில் இளைஞர் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

குரு பரம்பரையிடமிருந்து உத்வேகத்தைப் பெறவும், இதய வழியின் ஒருங்கிணைந்த பகுதியாக இருக்கும்படியாகத் தங்கள் ஆற்றலை வழிப்படுத்தவும் இளைஞர்களை ஊக்குவிக்கும் வண்ணம், குறிப்பிட்ட கால இடைவெளிகளில், சிறந்த பேச்சாளர்கள் கலந்து கொள்ளும் வார இறுதி நிகழ்ச்சிகளை, ஒருங்கிணைப்பாளர்கள் ஏற்பாடு செய்து வருகின்றனர்.

சென்னை மெட்ரோ மற்றும் அதன் சுற்றுப் பகுதிகளில், பல்வேறு செயல்பாடுகளுக்காக, இளம் குழுத் தலைவர்களும், தன்னார்வத் தொண்டர்களும் கண்டறியப்பட்டு வருகின்றனர். ஆசிரம நிகழ்ச்சி நிர்வாகம், பொருளடக்க உருவாக்கம் மற்றும் தொகுத்தல், சமூக ஊடக மேலாண்மை, இதய நிறைவு பயிற்சியாளர்கள் மற்றும் தகவல் தொழில் நுட்ப பணி ஆகியவை இதில் அடங்கும். சுமார் 200 ஊக்கமிகுந்த இளம் அப்யாசிகளைக் கொண்ட குழு, வருங்காலத் தேவைகளுக்கு உறுதி அளிப்பதாக உள்ளது.

## V- கனெக்ட், கேத்பர்மா, குஜராத் 6A



குஜராத் 6A மண்டலம், அகமதாபாதின் V- கனெக்ட் குழு, அதன் தலைமையகக் குழுவின் உதவியுடன், கேத்பர்மாவில் ஒரு முழுநீள நிகழ்ச்சியைத் திட்டமிட்டு செயல்படுத்தியது.

செப்டம்பர் 16 அன்று, அகமதாபாத்தின் சுயசேவகர் குழு ஒன்று, NLRDFன்(சபர்கன்டா மாவட்டத்தின் பழங்குடி பகுதியில் செயல்பட்டு வரும் ஒரு அரசு சாரா நிறுவனம்)குழுவுடன் இணைந்து, கேத்பர்மா என்ற சிறிய நகரத்திற்கு வருகை புரிந்தது. அவர்கள், இப்பகுதியில், ஆறு பெரிய கல்வி நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு, உலக அமைதி தினம் அன்று நடைபெறும் நிகழ்ச்சியைப் பற்றிய முழு விவரங்களையும் அளித்தனர். இரு பிரிசெப்டர்கள் மற்றும் ஒரு பேச்சாளர் சகோதரி கொண்ட ஒரு குழு, NLRDF ன் இரு அங்கத்தினருடன் சேர்ந்து, இந்நிறுவனங்களில் நிகழ்ச்சிகளை நடத்தினர்.

செப்டம்பர் 21 ம் தேதி நடந்த ஒரு செயல்முறை அமர்வில், சுமார் 1400 க்கும் மேற்பட்டோருக்கு, தளர்வு நிலை நுட்பம் மற்றும் தியானம் பற்றிய விவரங்கள் அளிக்கப்பட்டன. 22 ம் தேதியிலிருந்து, சுமார் 500 பேர் பயிற்சியைத் துவங்கியுள்ளனர். 4 பிரிசெப்டர்கள் கொண்ட ஒரு குழு, அந்த சிறிய நகரத்தில் தங்கி, அறிமுக சிட்டிங்குகளைப் பூர்த்தி செய்தனர்.

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்® எக்கோஸ் இந்தியா செய்தி மடல்


கொல்கத்தா


வல்ஸாத்

## C-கனெக்ட் பயிற்சி, கொல்கத்தா

போதிய முன்னறிவிப்பில்லாத போதிலும், மேற்கு வங்காளம் மற்றும் சுற்றுப்புற மாநிலங்களிலிருந்து, 120க்கும் மேலானோர், கொல்கத்தா பாபூஜி மெமோரியல் ஆசிரமத்தில், ஆகஸ்ட் 22 ம் தேதி நடந்த C-கனெக்ட் பயிற்சியில் பங்கேற்றனர். இதயநிறைவு தொடக்க முயற்சியைப் பற்றிய ஒரு விவரமான விளக்கத்துடன் இந்நிகழ்ச்சி தொடங்கியது. இதில் குறிக்கோள்கள் மற்றும் எதிர்பார்ப்புகள் போன்ற அம்சங்கள் இடம் பெற்றன. இதயநிறைவு பற்றிய மாஸ்டரின் விடியோக்களிலிருந்து ஒரிரு பகுதிகள் காட்டப்பட்டன. மதிய உணவிற்குப் பின்னர் நிகழ்ச்சி ஒருமுக நோக்காய் C-கனெக்ட் தொடக்க முயற்சியைப் பற்றியே இருந்தது. எவ்வாறு நிறுவனங்களை அணுகுவது, நிகழ்ச்சியை நடத்துவது, மற்றும் அதில் வரக்கூடிய சிக்கல்கள் ஆகியவற்றைப் பற்றி ஒருங்கிணைப்பாளர்கள் விளக்கினார்கள். அதனைத் தொடர்ந்து இன்னொரு கேள்வி-பதில் நேரமும் ஓர் செய்முறை நேரமும் நடந்தன. செய்முறை நேரம் மிகுந்த நுண்ணறிவளிப்பதாய் இருந்ததோடு, பங்கேற்றவர்களுக்கு அவர்கள் வெவ்வேறு நிறுவனங்களில் நிகழ்ச்சிகளை நடத்தும் போது என்ன எதிர்பார்க்கலாம் என்று எடுத்துக்காட்டுவதாக இருந்தது.

## அலகாபாத், உத்தரப் பிரதேசம்

அலகாபாத் ஆசிரமத்தில், செப்டெம்பர் 19, 20ம் தேதிகளில், 'பயிற்சியாளருக்குப் பயிற்சி' என்னும் இதய நிறைவு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்தியா முழுவதிலிருந்தும் சுமார் 226 அப்யாசிகள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்று செய்தியைப் பரப்புவதற்கு வேண்டிய பெரும் தன்னம்பிக்கையோடு தத்தம் மையங்களுக்குத் திரும்பிச் சென்றனர். 19ம் தேதியன்று நிகழ்ச்சியின் ஆரம்பத்தில் இதயநிறைவைப் பற்றிய ஒரு அறிமுகமும், கேள்வி-பதில் நேரங்களும் நடைபெற்றன. மதிய உணவிற்குப் பிறகு சந்தேகங்கள் விளக்கப்பட்டதோடு நிகழ்ச்சி முடிவடைந்தது.
20ம் தேதியன்று நிகழ்ச்சி சத்சங்கத்துடன் தொடங்கியது. C-கனெக்ட், V-க்னெக்ட் மற்றும் G-கனெக்ட் ஆகியவற்றைப் பற்றி ஒருங்கிணைப்பாளர்கள் அளித்த சுருக்கமான அறிமுகம் அப்யாசிகளுக்கு அறிவுறுத்துவதாகவும், தகவல் தெரிவிப்பதாகவும் இருந்தது. பயிற்சி மதியம் 2மணிக்கு முடிவடைந்தது.

## வல்ஸாத், குஜராத்

தற்போதைய தேவையை மனதில் கொண்டு, வல்ஸாத் மையத்தில் இதயநிறைவைப் பற்றிய விழிப்புணர்வு வருவதற்காக ஒரு பயிற்சியளிக்கும் நிகழ்ச்சி நடத்தப்பட்டது. சூரத், வல்ஸாத், மற்ற துணை மையங்களிலிருந்து சுமார் 150அப்யாசிகள் பயிற்சியில் பங்கேற்றனர்.நிகழ்ச்சியை மண்டலப் பொறுப்பாளர் சகோ. டாக்டர் சுரேந்த்ரா அக்ரவால் நடத்தினார். இந்நிகழ்ச்சி, நடைமுறையில் மிகவும் எளிதாக்கப்பட்டுள்ள, ஆன்மீக நாட்டமுடைய புதியவர்களை அணுகும் முறையைப் பற்றிய விழிப்புணர்ச்சியை, அப்யாசிகளுக்கு ஏற்படுத்தியது. அதனைத் தொடர்ந்து நடந்த கேள்வி-பதில் நேரம் அவர்களது வினாக்களுக்கு விடையளிப்பதாய் இருந்தது. இந்நிகழ்ச்சி ஒவ்வொருவரும் இந்த சகஜ மார்க்க இயக்கத்தில், மாஸ்டரின் அருட்செய்தியை அதிகபட்சமான மக்களிடையே பரப்புவதில் பங்கேற்க முடியும் என்ற நம்பிக்கையை அப்யாசிகளிடத்தில் உருவாக்க உதவியது.

## மையப்பொறுப்பாளர்கள்

### மையம்/மண்டலப் பொறுப்பாளர்

சென்னை மெட்ரோ மண்டலம் (மண்டலம்2)
சகோ.எஸ்.பிரகாஷ் (CC & ZC)

பீஹார் & ஜார்கண்ட்(மண்டலம் 17)
சகோ.அகிலேஷ் குமார் ஜா

### மையப்பொறுப்பாளர்கள்

ருத்ராபூர் மையம், உத்தரகாண்ட்
சகோதரி மன்ஜீத் கௌர்

நைனிடால் மையம், உத்தரகாண்ட்
சகோதரி கீதா ஸரின்

ஓரை மையம், உத்தரப் பிரதேசம்
சகோ.Dr.(மேஜர்)ரண்வீர் சிங்

### ஆசிரம மேலாளர்கள்

காங்டாக் ஆசிரமம்
சகோ.ஓம் பிரகாஷ் குலியா

லக்னௌ ஆசிரமம்
சகோ.அனில் குமார் ஸக்ஸேனா

உடுப்பி ஆசிரமம்
சகோ.ஆர்.ஸ்ரீதர்

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்® எக்கோஸ் இந்தியா செய்தி மடல்

# தனி ஒருவரின் மன அமைதி உலக அமைதிக்குப் பங்களிக்கிறது

ஐ.நா.சபையின் உலக அமைதி நாளான செப்டெம்பர் 20, 2015 அன்று, 'இதய நிறைவு' நிகழ்ச்சிகள் இந்தியாவின் பல்வேறு ஆசிரமங்களிலும் மையங்களிலும் நடைபெற்றன. இந்நிகழ்ச்சியில் சமுதாயத்தின் பலதரப்பட்ட மக்கள் கலந்து கொண்டனர். அழைப்பிதழ்கள், பதாகைகள், உள்ளூர் நாளிதழ்களில் இது பற்றிய செய்திகள் மற்றும் தனிப்பட்ட முறையில் அறிவித்தல் போன்றவற்றின் மூலம், தனித்தன்மை வாய்ந்த இந்நிகழ்ச்சி பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

அநேகமாக இந்தியாவின் அனைத்து மையங்களும் ஒரே மாதிரியான நிகழ்ச்சியை வடிவமைத்திருந்தன. இந்நிகழ்ச்சி 'தனி மனித அமைதியே உலக அமைதிக்கு வழி வகுக்கும்' என்ற தலைப்பிலான உரையுடன் ஆரம்பமாயிற்று. அதன் பின் 'இதய நிறைவு' நிகழ்ச்சி நடத்தப்பட்டது. ஒரு சிறு அறிமுக உரைக்குப்பின், 10 நிமிட சுய தியானம் செய்யப்பட்டது. பங்கேற்றவர்கள், தாங்கள் உணர்ந்ததை பதிவு செய்யுமாறு ஊக்குவிக்கப்பட்டனர்.

'இதய நிறைவு' குழுவால் ஆக்கம் செய்யப்பட்டிருந்த ஒரு வீடியோ ஒளி பரப்பப்பட்டது. வழிகாட்டுதலுடன் கூடிய தளர்வு நிலையும், அதையடுத்து 30 நிமிட வழிகாட்டுதலுடன் கூடிய தியானப் பயிற்சியும் நடத்தப்பட்டது. அதன் பின் பங்கேற்றவர்கள், தங்கள் அனுபங்களை பகிர்ந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். அநேகமாக அனைவரும் சாதகமான பின்கருத்துக்களையே கூறினர். சிலர் தனிப்பட்ட அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். சிலர் தியான முறையை ஆரம்பிக்க ஆர்வம் காட்டினர். அவர்களுக்கு முறையான வழிகாட்டப்பட்டது. பங்கேற்றவர்களிடம், 'இதய நிறைவு' தளர்வு நிலை நுட்பத்தை, குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுக்கு அறிமுகப்படுத்துமாறு கூறப்பட்டது.

அநேக பாட சாலைகள் 'தளர்வு நிலை' செயல் முறையை தங்கள் தினசரி பாட அட்டவணையின் ஒரு அங்கமாக எடுத்துக்கொள்ள முன்வந்தன. வழிகாட்டுதலுடன் கூடிய'தளர்வு நிலை' முறையைப் பின்பற்ற, பல மாநிலங்களிலிருந்தும் அநேக கல்லூரிகள் ஆர்வம் காட்டின. தனித்தன்மை வாய்ந்த இந்த இயக்கமானது ஆரம்பிக்கப்பட்டு, காட்டுத்தீ போல வேகமாக பரவி வருகிறது.


அஜ்மீர்


அல்வார்


ஆரணி


பீகார்


சந்த்ராபூர்


திக்பாய்


ஜம்மு


கோண்டியா


சிங்கர்வா


ராணிகேத்


உஜ்ஜெயின்


கம்ப்லிகோட்டல்


கான்பூர்


கரக்பூர்


கோழிகோடு


லொங்கோவால்


விஜயவாடா


ஜெய்பூர்

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்® எக்கோஸ் இந்தியா செய்தி மடல்

## இதய நிறைவு- துவக்க முயற்சிகள்

இதய நிறைவு நிகழ்ச்சிகள் நாடு முழுவதிலும் முழு மூச்சில் நடைபெறுகின்றன. இந்நிகழ்ச்சி, C-கனெக்ட், U-கனெக்ட்,G-கனெக்ட், V-கனெக்ட், உணர்வு பூர்வ வாழ்வு மற்றும் இதய நிறைவு நிகழ்ச்சிகள் என பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிலும் தனித்தனியாகக் கவனம் செலுத்தவும், அதன் குறிப்பிட்ட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் இது உதவுகிறது. நாட்டின் பல்வேறு இடங்களிலிருந்து வந்து குவியும் அறிக்கைகள், ஆன்மீக ஈடுபாடு உள்ளவர்கள் இந்நிகழ்ச்சியை மிகுந்த ஆர்வத்துடன் வரவேற்று ஏற்றுக் கொள்கிறார்கள் என்றும், நூற்றுக்கணக்கான மக்கள் இந்த செயல்பாட்டின் மூலம் பயிற்சியைத் துவங்கி இருக்கிறார்கள் என்றும் தெரிவிக்கின்றன.


மொராதாபாத்


ஓங்கோல்


வதோதரா


ஜோத்பூர்


ஷோராபூர்


குல்பர்கா


பைத்தான்


குன்னூர்


புல்காவ்


திருச்சி

To download or subscribe to this newsletter, please visit http://www.sahajmarg.org/newsletter/india For feedback, suggestions and news articles please send email to in.newsletter@srcm.org

© 2015 Shri Ram Chandra Mission ("SRCM"). All rights reserved. “Shri Ram Chandra Mission", "Sahaj Marg", “SRCM”, “Constant Remembrance” and the Mission's Emblem are registered Trademarks of Shri Ram Chandra Mission.This Newsletter is intended exclusively for the members of SRCM. The views expressed in the various articles are provided by various volunteers and are not necessarily those of SRCM.